## IV. ஆளணி

திரு. டி. டபிள்யூ. இராஜபத்திரன திரும்பவும் மகாவங்கியின் ஆட்சியாளராக ஆடி 1, 1962டில் நியமனஞ் செய்யப்பட்டார். சர்வதேச நாணய நிதியில் இலங்கையினது மாற்றீட்டு ஆட்சியாளர் என்ற முறையில் புரட்டாதி 10, 1962டில் அவர் சர்வதேச நாணய நிதியினதும், சர்வதேச புனருத்தாரண, அபிவிருத்தி வங்கியினதும், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தினதும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினதும் வருடாந்தக் கூட்டங்களிற் பங்கு பற்றுவதற்காக வாஷிங்டனுக்குச் சென்ருர். அவர் புரட்டாதி 28, 1962டில் இலங்கை திரும்பினுர்.

நாணயச் சபையின் அரசாங்க அங்கத்தவரான திரு. எச். எஸ். அமரசிங்க நிதி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசிப் பதவியில் ஆவணி 26, 1961டில் உசிதப்படுத்தப்பட்டார்.

உப ஆட்சியாளரான திரு. டபிள்யூ. தென்னக்கூன் மகாவங்கியின் பிரதிநிதியாகவும், இலங்கை அரசாங்கத்தின் தூது கோஷ்டியின் சக தலைவராகவும், பங்குனி 1962டில் டோக்கியோவில் நடந்த ஆசிய தூரகிழக்குத் தேசப்பொருளாதார ஆலோசனைச் சபையின் 18வது கூட்டத் தொடர்ச்சியில் பங்கு பற்றினுர். அவர் இலங்கையிலிருந்து பங்குனி 3-ம் திகதி சென்று பங்குனி 27, 1962டில் இலங்கை திரும்பினுர். திரு. டபிள்யூ. தென்னக்கூன் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 17வது கூட்டத் தொடர்ச்சிக்கு இலங்கை தூது கோஷ்டியின் ஒரு அங்கத்தவராக அரசாங்கத்திஞல் நியமிக்கப்பட்டு இலங்கையில் இருந்து புரட்டாதி 14, 1962டில் சென்ருர். திரு. தென்னக்கூன் சர்வதேச நாணயச்சபையினது மாற்றீட்டு நிர்வாக இயக்குநராக கார்த்திகை 1, 1962 முதல் நியமிக்கப்பட்டார். அவர் சர்வதேச நாணயச்சபையினது மாற்றீட்டு இயக்குநராக கடமையாற்றிக்கொண்டே ஐக்கியநாடுகளின் பொதுச்சபையின் 17வது கூட்டத் தொடர்ச்சியில் மார்கழி 18, 1962 வரையிற் பங்குபற்றினுர்.

திரு. தென்னக்கூன் வெளியூர்களில் இருக்கும் காலம்வரை ஆட்சியாளருக்கு உதவியாளரான திரு. டி. சி. குணசேகர தற்காலிக உப ஆட்சியாளராகப் புரட்டாதி 15, 1962ல் நியமனஞ்செய்யப்பட்டார்.

பொருளாதார ஆராய்ச்சிப் பகுதியின் இயக்குநர் டாக்டர் காமினி கொறியா ஆனி 20, 1962ல் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் வேண்டுகோளின் நிமித்தம் பிரிட்டிஸ் கொண்டேருஸ்க்கு பொருளாதார திட்டக் கோஷ்டியின் (தலை) நிபுணராக ஆனி 20, 1962ல் சென்று கார்த்திகை 20, 1962ல் இலங்கை திரும்பினுர்.